## செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.29/2022** **நாள் : 21.07.2022**

### முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அனைத்து பகுதிகளில் உள்ள தெருக்களில் கழிவுநீர் செல்லும் குழாய்கள் மற்றும் இயந்திர நுழைவாயில்களில் உள்ள கசடுகளை அகற்றி தூர்வாரும் பணிகள் 21.07.2022 முதல் 30.07.2022 வரை மேற்கொள்ளப்படும்

### சென்னை குடிநீர் வாரியம் தகவல்

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பகுதி அலுவலகம்-1 முதல் 15 வரை உள்ள தெருக்களில் கழிவுநீர் செல்லும் குழாய்கள் மற்றும் இயந்திர நுழைவாயில்களில் உள்ள கசடுகளை அகற்றி தூர்வாரும் பணிகள் 21.07.2022 முதல் 30.07.2022 வரை மேற்கொள்ளப்படுகிறது.

| வரிசை எண் | பகுதி எண் | பகுதி | மொத்த தெருக்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | 1 | திருவொற்றியூர் | 126 |
| 2 | 2 | மணலி | 45 |
| 3 | 3 | மாதவரம் | 18 |
| 4 | 4 | தண்டையார்பேட்டை | 135 |
| 5 | 5 | ராயபுரம் | 137 |
| 6 | 6 | திரு.வி.க.நகர் | 135 |
| 7 | 7 | அம்பத்தூர் | 119 |
| 8 | 8 | அண்ணா நகர் | 149 |
| 9 | 9 | தேனாம்பேட்டை | 162 |
| 10 | 10 | கோடம்பாக்கம் | 144 |
| 11 | 11 | வளசரவாக்கம் | 54 |
| 12 | 12 | ஆலந்தூர் | 81 |
| 13 | 13 | அடையாறு | 117 |
| 14 | 14 | பெருங்குடி | 10 |
| 15 | 15 | சோழிங்கநல்லூர் | 28 |
| **மொத்தம்** | | | **1460** |

மேற்குறிப்பிட்ட 1460 தெருக்களில் 282 தூர்வாரும் இயந்திரங்கள், 161 ஜெட்ராடிங் இயந்திரங்கள் மற்றும் 57 கழிவுநீர் உறிஞ்சும் இயந்திரங்கள் ஆக மொத்தம் 500 கழிவுநீர் இயந்திரங்கள் மூலம் பெருமளவில் கழிவுநீர் செல்லும் குழாய்கள் மற்றும் இயந்திர நுழைவாயில்களில் உள்ள கசடுகளை அகற்றி தூர்வாரும் பணிகள் 21.07.2022 முதல் 30.07.2022 வரை மேற்கொள்ளப்படுகிறது.

எனவே, பொதுமக்கள் தங்கள் பகுதியில் உள்ள தெருக்களில் கழிவுநீர் அடைப்பு / வழிந்தோடுதல் தொடர்பான புகார்களை சம்பந்தப்பட்ட பகுதி அலுவலகத்திலும் மற்றும் பணிமனை அலுவலகத்திலும் தொடர்பு கொண்டு தங்களுடைய குறைகளை நிவர்த்தி செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்**

**சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்**

**கழிவுநீரகற்று வாரியம்**